சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 15.07.2025
ம.சா.1 – சுமையாரோஜி க.பெ. சர்க்கரை பீர் முகமது
M.COP. No. : 5/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

விபத்து எப்படி நடந்தது என்பது எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தைப்பற்றி எனது உறவினர் ரம்ஜான் என்பவர் தெரிவித்தார். அவர் தெரிவித்ததன் அடிப்படையில் தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் என் கணவரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் விபத்திற்கு பின்னிட்டு வைத்துப் பார்த்தேன். விபத்து குறித்து வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாகனத்திற்கு என்ன சேதாரம் ஏற்ப்பட்டது என்பதைக் காட்டக்கூடிய மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த பின்னர் என் கணவர் ஓட்டிச்சென்ற ஹீ ரோகோண்டா இருசக்கர வாகனத்தை சம்பவ இடத்திலேயே விட்டுச் சென்றதாகவும் அது களவு போய்விட்டதாகவும் நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் இறக்கும்போது அவருடைய வயது 31 என்றால் சரிதான். என் கணவருக்கு விபத்தில் தலைக்காயம் ஏற்பட்டு அவர் இறந்தார் என்றால் சரிதான். விபத்தில் என் கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் தலைக்காயத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் அதுபற்றி தெரியாது. என் கணவர் ஓட்டுநராக பணியாற்றினார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேன். மாதம் ரூ.30,000/- எனது கணவர் ஈட்டி வந்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் அதன்பிறகு கிடைக்கவில்லை. ஆமினாபேகம் என்பவர் என்னுடைய மாமியார் ஆவார். அவர் எங்களுடன் தான் வசித்து வருகிறார். விபத்தானது

என்னுடைய கணவருடைய கவனக் குறைவால் ஏற்பட்டது என்றும் 1ம் எதிர்மனுதாரருடைய கவனக்குறைவு இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.15 20:38:56 +0530

Sub Judge

Melur